**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

---

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

---

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 30 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தற்ற 47 ஆதனங்கள் மற்றும் இரு வாகனங்கள் என்பவற்றின் பெறுமதிகள் முறையே கூட்டுமொத்தம் ரூபா 22,555,483 மற்றும் ரூபா 938,415 என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் ஆதனங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பவற்றின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் ரூபா 36,983,745 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சபையின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,727,986 எனக் கொண்டுவரப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணி கட்டடங்களின் பெறுமதி ரூபா 11,255,759 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்டிருந்த 05 ஒப்பந்த நிர்மாண வேலைகளுக்கான மேலதிக ஏற்பாடுகளின் கூட்டு மொத்தம் ரூபா 47,015 கடந்த 02 வருடங்களாக திரண்டநிதிக்கு மாற்றப்பட்டிருக்காது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டு வந்தமையினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் திரண்ட நிதி ரூபா 47,015 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினது பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 2,231,150 பெறுமதியான 11 அபிவிருத்தி வேலைகளுக்கு மூன்று ஒப்பந்தகாரர்களுக்கு சபை நிதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் சம்பந்தப்பட்ட அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய இந் நிதியினை உரியவாறு பெற்றுக் கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது தொடர்ந்தும் ஒப்பந்தகாரர்களுக்கு சபை நிதியிலிருந்து வழங்கிய முற்பணமாக கடந்த 01 தொடக்கம் 02 வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

நிறைவேற்றப்பட்டிருந்த ஒப்பந்த வேலைகள் தொடர்பில் இரு ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 743,872 மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158(1) | 4,420,482 | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு சபையின் செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் நிதி ஒழுங்கு விதி 571 | 1,229,064 | நாற்பத்தொன்பது காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. |
| (இ) | அரச நிர்வாக சுற்றறிக்கை 26 ஜுன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம் | | 09 வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு |

முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | 03 உத்தியோகத்தர்களிடம் சபையினால் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 28,045,949 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 25,785,467 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 2,186,955 | 78,095,303 | 2,260,298 | 5,338,480 | 2,570,965 | 403,506 | 2,234,827 | 4,803,580 |
| (ii) | வாடகைகள் | 12,719,392 | - | 10,924,286 | 22,472 | 13,271,144 | - | 10,660,006 | 19,197 |
| (iii) | அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 1,820,000 | - | 1,882,427 | 15,500 | 1,816,000 | - | 1,654,520 | 43,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 19,253,000 | - | 26,620,190 | 69,474,678 | 15,963,500 | - | 22,322,954 | 66,404,728 |
| | | **35,979,347** | **78,095,303** | **41,687,201** | **774,851,130** | **33,621,609** | **403,506** | **36,872,307** | **71,270,505** |

#### 2.2.2 வீதவரிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதங்கள்**

அறவிடப்பட வேண்டிய ஆதனவரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 4,420,482 கடந்த 01 தொடக்கம் 21 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தண்ணீர் வரி**

தண்ணீர் வரி நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 210,535 கடந்த 01 தொடக்கம் 13 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 376,691 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 218,612 தொகையான முத்திரைக்கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்படவேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) **கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டு ரூபா 35.21 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல நோக்கு மண்டபத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 49.9 மில்லியன் பெறுமதியான 16 மூலதன வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்தன.

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 07 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்திருந்தன.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் 03 தொடக்கம் 18 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வரும் 06 வாகனங்கள் சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**3.3.2 விளைவற்ற சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 884,992 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொன்னாலை கிராமிய சந்தை கடந்த இரு ஆண்டுகளாக சபையினால் பாவனைக்கேற்றதாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான இரு வாகனங்கள், கொல்களம் மற்றும் முன்னைய தலைமை அலுவலகக் கட்டடம் என்பன கடந்த 02 தொடக்கம் 15 ஆண்டுகளாகப் பயன்பாடற்றுக் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 62,427 தொடக்கம் ரூபா 5,044,754 அல்லது 03 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 48,873 தொடக்கம் ரூபா 6,008,323 அல்லது 06 சதவீதம் தொடக்கம் 12 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|
| கணக்கீடு | இழப்புப் பதிவேடு, தெரு விளக்கு பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு , காணி விற்பனை வரிப்பதிவேடு , ஊழியர் பிணைப்பண பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |